# நூலகம் மற்றும் வாசிப்புப் பழக்கத்தை மாணவர்களிடம் ஊக்குவிக்க வேண்டும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

தொழில்நுட்பத்திற்கும், மனிதச் சிந்தனைக்கு மான வேறுபாட்டை உணர்த்தவேண்டும்! அறத்தின் வலிமையையும், நேர்மையின் தேவையையும் மாணவர்களுக்கு நீங்கள்தான் கற்றுக் கொடுக்க வேண்டும்! மாணவர்களுக்கு பாடப் புத்தகங்களைக் கடந்து, இலக்கியங்களை, பொது அறிவுத் தகவல்களை, சமூக ஒழுக்கத்தை, சுற்றுச்சூழல் பற்றிய விழிப்புணர்வை, காலநிலை மாற்றம் குறித்த தெளிவை, மாற்று எரிசக்திகளின் தேவையைப் பற்றியெல்லாம் நீங்கள் உரையாடி புரிய வைக்கவேண்டும்!

**ஆசிரியர்களின் முயற்சி – மாணவர்களின் வாழ்க்கையையே மாற்றி அமைக்கும்!**

“என்னடா நம்முடைய டீச்சர் போர் அடிக்கிறார்கள்'' என்று அவர்கள் நினைத்துவிடக் கூடாது! மாணவர்களிடம் நீங்கள் ஒரு நண்பனாக பழகவேண்டும்!

யூடியூபில் சில ஆசிரியர்கள், தங்களுடைய மாணவர்களுக்கு ‘Critical Thinking – Problem Solving’ பற்றியெல்லாம், Creativeஆக சொல்லித்தர பல வீடியோக்கள் வருகிறது. அது போன்று நீங்களும் புதுப்புது முயற்சிகளை எடுக்கலாம்... உங்களுடைய முயற்சி ஒரு மாணவ, மாணவியின் வாழ்க்கையையே மாற்றி அமைக்கலாம்!

**ஆசிரியர்களுக்கான பெரிய விருது இதுதான்!**

அவர்களுக்குள்ளே ஒளிந்திருக்கின்ற திறமையை வெளிக்கொண்டு வர முயற்சிக்க வேண்டும். அவர்கள் தலைமுறையை ஏற்றம் பெறச்செய்யலாம்! இதற்கெல்லாம் காரணம், எங்கள் சயின்ஸ் சார், மேத்ஸ் டீச்சர், பி.டி. சார் என்று அவர்கள் சொல்வதுதான் உங்களுக்கான பெரிய அவார்ட்!

இன்றைக்கு நீங்கள் விதைக்கப் போகின்ற நல்ல விதைதான், நாளைக்கு நம்முடைய சமூகத்தில் முளைக்கப் போகிறது!

**ஆசிரியர்கள் எதையும் அன்பாக, பக்குவமாக எடுத்துரையுங்கள்!**

மற்றொரு முக்கியமான விஷயத்தையும் நீங்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். மாணவர்களுக்கு எந்த அளவுக்கு அறிவாற்றல் முக்கியமோ, அதே அளவுக்கு அவர்களுக்கு உடல்நலமும், மனநலமும் முக்கியம்! மாணவர்களை மிகவும் ‘ப்ரஷ்’ செய்யக் கூடாது! நாம் அன்பாக, பக்குவமாகச் சொன்னால், மாணவர்கள் நிச்சயம் புரிந்து கொள்வார்கள்!

சில குழந்தைகள் யாரிடமும் பேசாமல் அமைதியாக இருப்பார்கள். சிலர் கலகலவென்று பேசுவார்கள். சிலர் படித்த குடும்பங்களில் இருந்து வந்திருப்பார்கள். சிலருடைய குடும்பங்கள் இப்போதுதான் கல்வி கற்கத் தொடங்கியிருப்பார்கள். அனைவருடைய வீட்டிலும் ஒரே சூழல் இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. அதனால், அனைவரையும் ஒரே அளவுகோலோடு, முன் முடிவோடு அணுகக்கூடாது!

**ஆசிரியர்களே குழந்தைகளின் இரண்டாவது பெற்றோர்!**

அவர்களுடைய குடும்பச்சூழல் என்ன? அவர்கள் சமூகத்தில் எதிர்கொள்கின்ற பிரச்சினை என்னவென்று கவனித்து, அவர்களை வளர்த்தெடுக்க வேண்டியது உங்களுடைய பொறுப்பு! ஏனென்றால், நீங்கள் தான், அந்தக் குழந்தைகளுக்கான இரண்டாவது பெற்றோர்!

இன்னும் சொல்லவேண்டும் என்றால், இன்றைக்கு இருக்கின்ற சூழலில், பெற்றோர்களை விட, ஆசிரியர்கள்தான் பிள்ளைகளிடம் அதிகநேரம் இருக்கிறீர்கள். நம்முடைய திராவிட மாடல் ஆட்சி அமைந்த பிறகு, தமிழ்நாட்டு கல்விச் சூழலில், மிகப்பெரிய மாற்றங்களைக் கொண்டு வந்திருக்கிறோம்!

**நம் பெருமையின் அடையாளமாக உயர்ந்து வரும் அரசுப் பள்ளி மாணவர்கள்!**

இன்றைக்கு நம்முடைய அரசுப் பள்ளி மாணவர்கள், நம் பெருமையின் அடையாளமாக உயர்ந்து வருகிறார்கள். பள்ளிகளின் உட்கட்ட மைப்பும், தரமும் உயர்ந்திருக்கிறது! அவர்களுக்கு, சமூக அறிவும், உலக அறிமுகமும் கிடைக்க வேண்டும் என்ற, வெளிநாடுகளுக்கு ‘டூர்’ அழைத்துக் கொண்டு செல்கிறோம்!

அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளி மாணவர்களின் உயர்கல்வி, பொருளாதாரச் சூழல் காரணமாக தடைபடக் கூடாது என்று ‘புதுமைப்பெண்’ - ‘தமிழ்ப்புதல்வன்’ திட்டங்களை அறிமுகப்படுத்தியிருக்கிறோம்!

**மாணவர்களிடம் பிற்போக்குத்தனங்கள் தலையெடுக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள்!**

இது எல்லாவற்றிற்கும் மேலாக, அறிவுப்பசி யோடு பள்ளிக்கு வருகின்ற மாணவர்கள் பசியுடன் இருக்கக்கூடாது என்று சூடான - சுவையான - சத்தான காலை உணவை வழங்குகிறோம்! ஆசிரியர்களும் தங்களை Upgrade செய்வதற்கான அத்தனை வாய்ப்பு களையும் உருவாக்கித் தருகிறோம்!

இதையெல்லாம் பயன்படுத்தி, மாணவர்களை வளர்த்தெடுக்க வாருங்கள் என்று அன்போடு அழைக்கிறேன். கல்வி தொடர்பாக, நீங்கள் செய்யப் போகின்ற பணிகளைத் தாண்டி, மாணவர்களுக்குள்ளே சாதிய உணர்வு, பாலினப் பாகுபாடு போன்ற பிற்போக்குத் தனங்கள் தலை யெடுக்காமல் நீங்கள்தான் பார்த்துக் கொள்ள வேண்டும்!

**மாணவர்களிடம் மனது விட்டுப் பேசுங்கள்!**

சமத்துவம் மற்றும் சமூகநீதியின் தேவையைப் பற்றி மாணவர்களுக்கு எடுத்துச் சொல்லுங்கள்! மாண வர்களுக்கு, நல்ல ரோல் மாடல்களை அறிமுகப்படுத்துங்கள்! நீங்களே ஒரு ரோல்மாடலாக இருங்கள்! Civic Sense யை கற்றுத் தாருங்கள்! மாண வர்களிடம் அடிக்கடி மனதுவிட்டுப் பேசுங்கள். நூலகங்களையும், வாசிப்புப் பழக்கத்தையும் அறிமுகப்படுத்துங்கள்! அதற்கு, நீங்கள் முதலில் படித்துக் கொண்டே இருக்க வேண்டும்!

மாணவர்கள், எல்லாவற்றையும், ஏன் - எதற்கு - எப்படி என்ற பகுத்தறிவு உணர்வுடன் அணுகு கின்ற தலை முறையாக உருவாக்க வேண்டிய கட மையும், பொறுப்பும் உங்களுக்குத்தான் இருக்கிறது!

இதற்கான உங்கள் ஆசிரியர் பணி சிறக்க நான் மனதார அன்போடு, வாழ்த்தி விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

## இலக்கியம், பொது அறிவு, சமூக ஒழுக்கம், சுற்றுச் சூழல் குறித்தும் மாணவ, மாணவியரிடம் ஆசிரியர்கள் உரையாட வேண்டும்!

---

### பெரம்பலூர் மாவட்ட தி.மு.க.சார்பில் இன்று

# தமிழ்நாட்டை தலைகுனிய விட மாட்டோம், ஓரணியில் தமிழ்நாடு தீர்மான ஏற்பு கூட்டம்!

### அமைச்சர் சா.சி.சிவசங்கர் – ஏ.கே.எஸ்.விஜயன் சிறப்புரை! வீ.ஜெகதீசன் அறிக்கை!

பெரம்பலூர்,செப்,22

தமிழ்நாட்டின் மண் மொழிமானம் காக்க கழகத் தலைவர் அவர்களால் அறிவிக்கப்பட்டு, தமிழ்நாடு முழுவதும் 68 ஆயிரம் வாக்குச்சாவடிகளில் “ஓரணியில் தமிழ்நாடு” இயக்கத்தில் இணைந்துள்ள ஒரு கோடிக்கும் மேற்பட்ட குடும்பங்களால் முன்மொழியப்பட்டுள்ள “தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டோம்” என்ற தீர்மான ஏற்புக் கூட்டங்கள், கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் உத்தரவுப்படி தமிழகம் முழுவதும் நடைபெறுகிறது.

கழக துணைப் பொதுச் செயலாளர் மேனாள் ஒன்றிய அமைச்சர் ஆ.இராசா. எம்.பி., வழிகாட்டுதல்படி, போக்குவரத்துத்துறை மற்றும் மின்சாரத்துறை



அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஆலோசனைக்கினங்க, இன்று (22.09.2025, திங்கட்கிழமை),மாலை 6.00 மணியளவில், பெரம்பலூர் பழைய பேருந்து நிலையத்தில் உள்ள அம்பேத்கர் சிலை அருகில், பெரம்பலூர் மாவட்ட தி.மு.க. சார்பில் நடைபெறும் தீர்மான ஏற்பு கூட்டத்திற்கு , பெரம்பலூர் ஒன்றிய கழகச் செயலாளர் எம்.இராஜ்குமார் வரவேற்புரையாற்றுகிறார்.

மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன்(நான்) தலைமை வகிக்கிறேன். இதில் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் மாநில விவசாய அணி செயலாளர் டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே. எஸ்.விஜயன்.Ex.MP.

தலைமை கழக பேச்சாளர் புதுக்கோட்டை தமிழினியன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றுகின்றனர். கே.என். அருண்நேரு.எம்.பி., சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன், பெரம்பலூர் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் தங்க.சித்தார்த்தன், குன்னம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் ஏ.கே.அருண் உள்ளிட்டோர் கலந்து கொள்கின்றனர். மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் ம.மணிவாசகம் நன்றியுரையாற்றுகிறார்.

இந்த தீர்மான ஏற்புக் கூட்டத்தில், மாநில நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள்,

ஒன்றிய,நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், முன்னாள், இன்னாள் உள்ளாட்சி அமைப்புகள் பிரதிநிதிகள்,கழக முன்னோடிகள் உள்ளிட்ட அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் இவ்வாறு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார் .



தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில் நடைபெற்ற ”ஓரணியில் தமிழ்நாடு தீர்மான ஏற்பு பொதுக்கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி சிறப்புரையாற்றினார். பொதுக்கூட்டத்தில் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ, முன்னாள் எம்.பி செ.இராமலிங்கம், மாவட்டக் கழக நிர்வாகிகள் கோவி.அய்யாராசு, க.நசீர்முகமது, மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் குட்டி இரா.தெட்சிணாமூர்த்தி, மாநில இலக்கிய அணி துணைச் செயலாளர் ஆடுதுறை மு.உத்திராபதி, ஒன்றியச் செயலாளர்கள் கோ.தாமரைசெல்வன், தியாக.சுரேஷ்,உள்ளூர் டி.கணேசன், கோ.க.அண்ணாதுரை, கூகூர் சி.அம்பிகாபதி, பி.எஸ்.குமார், எஸ்.கே.முத்துசெல்வம், என்.நாசர், ஜெ.சுதாகர், மிசா மனோகரன்,சுந்தர ஜெயபால், இர.உதயசந்திரன், சரவணன் உள்ளிட்ட பகுதி, பேரூர் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகரக் கழக நிர்வாகிகள் மற்றும் சார்பு அணியினர் கழக முன்னோடிகள் கலந்து கொண்டு உறுதிமொழி ஏற்றனர்.



பெரம்பலூர் மாவட்டம், பேரறிஞர் அண்ணா அவர்களின் 117ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, மாவட்ட கழக அலுவலகத்தில் அவரது உருவப்படத்திற்கு மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் கே.என்.அருண்நேரு.எம்.பி. சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். அதன்பிறகு மண் ,மொழி, இனம் காக்கவும், தமிழ்நாட்டை தலை குனிய விடமாட்டோம், மத்திய அரசு தமிழகத்திற்கு தரவேண்டிய நிதியை கேட்டுப் பெறுவோம் என்பது உள்ளிட்ட உறுதிமொழிகள் எடுக்கப்பட்டது. இதில் தொகுதி பார்வையாளர்கள் தங்க.சித்தார்த்தன், ஏ.கே.அருண், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் மு.அட்சயகோபால், வழக்கறிஞர் என். ராஜேந்திரன், கி.முகுந்தன், பட்டுச் செல்வி ராஜேந்திரன், ராமச்சந்திரன், தழுதாழை பாஸ்கர்,சன்.சம்பத், செ.ரவிச்சந்திரன், எம்.இராஜ்குமார், செ.நல்லதம்பி, தி.மதியழகன், சி.ராஜேந்திரன், ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் டாக்டர் செ.வல்லபன்,ந.ஜெகதீஷ்வரன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஆதவன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



திருச்சி தெற்கு மாவட்டத்தில் பத்தாயிரத்திற்கு மேற்பட்டோர் திரண்ட மாபெரும் பொதுக்கூட்டம் ”தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன்! ஓரணியில் தமிழ்நாடு தீர்மான ஏற்பு கூட்டம் மாவட்டச் செயலாளர் – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் நடைபெற்றது. கழக முதன்மைச் செயலாளர் அமைச்சர் கே.என்.நேரு சிறப்புரையாற்றினார். இதில் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

### கலைஞர் காவியம் உள்ளிட்ட நூல்கள் மறு வெளியீடு!

# பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் உருவப்படம் திறப்பு!

### உலகத் தமிழ் அறக்கட்டளை – வாசிங்டன் தமிழ் அமைப்புகள் இணைந்து நடத்துகிறது!

வாசிங்டன், செப். 22-

பன்னாட்டுத் தமிழுறவு மன்ற நிறுவனர் பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன் அவர்களின் 75 ஆண்டுகள் தொடர்ச்சியாகத் தமிழ் இலக்கியம், (பத்திரிகை) இதழ், சமூகப் பணி ஆகிய துறைகளில் அரிய சேவையாற்றியதையொட்டி உலகத் தமிழ் அறக்கட்டளை (மேரிலாண்டு, அமெரிக்கா) மற்றும் வாசிங்டன் தமிழ் அமைப்புகள் இணைந்து பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் உருவப் படத் திறப்பு மற்றும் நோபல் தவம், கலைஞர் காவியம், சேது காப்பியம் ஆகிய நூல்கள் மறு வெளியீடு நிகழ்ச்சி ஹோாவர்டு கவுண்டி நூலக அமைப்பு - மத்திய கிளை - மேக்சின் வைட் வார் ஃபீல்ட் அரங்கத்தில் 2.10.2025 மாலை 5.45 மணி முதல் இரவு 7.30 மணி வரை நடைபெறுகிறது.

அனைத்து தமிழ் அமைப்புகளும் இதில் பங்கேற்று சிறப்பிக்குமாறு உலகத் தமிழ் அறக்கட்டளை நிறுவனத் தலைவர் தமிழ் மணிகண்டன் சேதுராமன் கேட்டுக்கொண்டுள்ளார்.




நாகை மாவட்ட தி.மு.க. சார்பில் தமிழ்நாட்டின் மண் மொழிமானம் காக்க கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு, தமிழ்நாடு முழுவதும் 68 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாக்குச்சாவடிகளில் ஓரணியில் தமிழ்நாடு இயக்கத்தில் இணைந்துள்ள ஒரு கோடிக்கும் மேற்பட்ட குடும்பங்களால் முன்மொழியப்பட்டுள்ள தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டோன் என்ற தீர்மான ஏற்புக் கூட்டம் பொதுக்கூட்டமாக நாகை அவுரித்திடலில் நடைபெற்றது. கூட்டத்தில் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தலைவர் என்.கௌதமன் பேசினார். உடன் தலைமைக் கழக பேச்சாளர் சிவாஜி.கிருஷ்ணமூர்த்தி, மாநில விவசாய அணி துணைத் தலைவர் எஸ்.கே.வேதரத்தினம், மாநில தீர்மானக் குழு உறுப்பினர் என்.வி.காமராஜ், மாவட்டக் கழக அவைத்தலைவர் ப.செல்வம், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் க.இராஜேந்திரன், ப.கோவிந்தராசன், இல.மேகநாதன், க.மறைமலை, மாவட்ட பொருளாளர் மு. லோகநாதன், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் பங்கேற்றனர்.